**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.30/2019** P.W. 2

Deposition of witness for Prosecution:

Name : திரு.ரவிச்சந்திரன் Father's Name.

Village :. திருத்துறைப்பூண்டி Age .

Date : 12.02.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.02.2024.

( A2, A16 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed other accused are present )

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் திருத்துறைப்பூண்டியில் வசித்துவருகிறேன். நான் அதிமுக கட்சியின் பேரவை மாவட்ட செயலாளராக இருந்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 28.01.2010 ம் தேதி மாலை 7 மணியளவில் மருதூர் கிராமத்திற்கு எங்கள் கட்சிகாரர் இல்ல திருமண விழாவிற்காக மாவட்ட செயலாளர் ஓ.எஸ். மணியன், நான் ராதாகிருஷ்ணன், சிவானந்தம், மூர்த்தி எங்களுடன் கட்சிகாரர்களும் சேர்ந்து கந்தபவுன்ராஜ் திருமணமண்டபத்திற்கு போய் திருமணத்தை நடத்திவிட்டு கீழே இறங்கிவந்து சாப்பிட்டுவிட்டு திரும்பி மேலே ஏறி காருக்கு வருவதற்காக மண்டபத்தின் கடைசி படியில் இறங்கி கொண்டிருந்தபோது ஏற்கனவே வாய்மேடு ஒன்றி செயலளாரக இருந்து அன்றைய தினம் கட்சியை விட்டு நீக்கியதாக அறிவிக்கப்பட்ட வாய்மேடு ஊராட்சி மன்ற தலைவராக இருந்த எல்.எஸ்.இ. பழனியப்பன் ஓ.எஸ். மணியனின் சட்டையை பிடித்து இழுத்து கழுத்தை பிடித்து நெறித்தார். அவருடன் வந்த கட்ட செந்தில் மற்றவர்களும் அவரது வேட்டியை பிடித்து இழுத்து அடித்தார்கள். அன்ட்ராயரையும் பிடித்து இழுத்து அவரை மானபங்க படுத்தினார்கள். பழனியப்பன் இத்தோடு அவனை விட்டுவிடாதீர்கள் அவனை அடித்து கொல்லுங்கடா என்று சொன்னார்.

என்னுடைய டாடா சபாரி கார் டிஎன் 50 கெச் 0099 வண்டியையும் உடைத்து சேதப்படுத்தினார்கள். காரின் சேதமதிப்பு ரூ.2 லட்சம் இருக்கும். அதன் பிறகு வந்துபார்த்து மதிப்பெடுக்கும்போது ரூ.5500/- என்று

சொன்னார்கள். பழனியப்பன் அவரது வலது கையால் இடது கண்ணில் ஓ.எஸ்.மணியனை குத்தியதில் கண்ணில் இருந்து ரத்தம் வந்தது, மூக்கு உடைந்து ரத்தம் ஊத்தியது. கூட்டத்தில் வந்தவர்கள் சவுக்கு கட்டையும் இரும்பு கம்பியும் வைத்திருந்தார்கள். என் காலில் முருகானந்தம் என்பவர் கம்பியால் குத்தினார். உடம்பிலும் தலையிலும் என்னையும் அடித்துவிட்டார்கள். ஓ.எஸ்.மணியனை அடித்து இழுத்துக்கொண்டுபோய் மித்தார்கள். எனக்கு உள்காயம் ஏற்பட்டது. அவர்கள் பின்னர் அவர்கள் வந்த காரில் ஏறிபோய்விட்டார்கள். நான் ஓ.எஸ்.மணியன் மூர்த்தி ஆகியோர் சிகிச்சைக்காக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**S.C.30/2019** P.W. 3

Deposition of witness for Prosecution:

Name : திரு. மூர்த்தி Father's Name .

Village :. மருதூர் Age .

Date : 12.02.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.02.2024.

( A2, A16 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed other accused are present )

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் மஞ்சள்கனியில் வசித்துவருகிறேன். விவசாய வேலைப்பார்த்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 28.01.2010 ம் தேதி மருதூர் தெற்கில் உள்ள கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் நடந்த எங்கள் ஊரை சேர்ந்த வெங்கடாசல தேவர் மகன் திருமணத்திற்கு நான் ஓ.எஸ்.மணியன், ரவிசசந்திரன், எம்.ஏ.ராதா, சிவானந்தம் மற்றும் கட்சி நண்பர்கள் எல்லோரும் போனோம். அப்போது மாலை 7 மணியிருக்கும். திருமணம் முடிந்து சாப்பிட்டுவிட்டு படி இறங்கி வந்துகொண்டிருந்தபோது வாய்மேட்டை சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர் பழனியப்பன் மற்றும் அவரது நண்பர்கள் சுமார் ஒரு 15 பேர் அமைச்சர் ஓ.எஸ்.மணியனை வேட்டி சட்டையை உருவி தூக்கிபோட்டு மிதித்து பழனியப்பன் அவரது வலது கையால் இடது கண்ணில் குத்தினார் அதில் அவருக்கு ரத்தம் வந்தது. பழனியப்பன் ஓ.எஸ்.மணியனை விட்டுடாதீங்கடா கொல்லுங்கடா மானபங்க படுத்துங்கடா என்று சொன்னார். மாக்கான் என்ற மகேந்திரன், வெற்றிசெல்வன், மணிகண்டன், குமரவேல், செந்தில் மற்றும் பலர் சேர்ந்து அவரை உருட்டு கட்டையால் தாக்கி என்னுடன் வந்த ரவிசந்திரனையும் வேட்டி சட்டையை உருவி காயப்படுத்தி என்னையும் குமரவேல் , ராமச்சந்திரன், வெற்றிசெல்வன் ஆகியோர் அடித்து தொடையில் காயப்படுத்தினார். ரவிசந்திரனின் கார் டிஎன் 50 0099 அதை உடைத்து சேதப்படுத்தினார்கள். அவர்கள் வந்த காரில் எதிரிகள் ஏறி போய்விட்டார்கள்.

அப்போது அதிமுக ஒன்றிய செயலாளர் பதிவியில் இருந்து 1வது எதிரியை கட்சி நீக்கிவிட்டார்கள். அப்போது ஓ.எஸ்.மணியன் மாவட்ட செயலாளராக இருந்ததாலர் அவர்தான் காரணம் என்று அவரை அடித்துவிட்டார்கள். நாங்கள் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது**.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.30/2019** P.W. 4

Deposition of witness for Prosecution:

Name : திரு. இராதாகிருஷ்ணன் Father's Name.

Village :. ஆயக்காரன்புலம் Age .

Date : 12.02.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.02.2024.

( A2, A16 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed other accused are present )

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் ஆயக்காரன்புலம் 2 ம் சேத்தியில் வசித்துவருகிறேன். நான் வி.ஏ.ஓ. வாக வேலைப்பார்த்து 2009 நவம்பர் மாதம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அதன் பிறகு வேதாரண்யம் சட்டமன்ற தொகுதியின் அதிமுக இணை செயலாளராக கட்சியில் இருந்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 28.01.2010 ம் தேதி மருதூர் தெற்கு கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் மருதூர் வடக்கை சேர்ந்த வெங்கடாசல தேவர் மகன் முத்துகிருஷ்ணன் திருமணத்திற்காக மாலை சுமார் 6 மணியளவில் நானும் மாவட்ட செயலாளர் மயிலாடுதுறை நாடாளுமன் உறுப்பினர் ஓ.எஸ்.மணியன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ்.டி. ரவிசந்திரன், ஒன்றிய கழக செயலாளர் சிவானந்தம், மருதூர் வடக்கு மூர்த்தி மற்றும் கட்சிகாரர்கள் எல்லோரும் சேர்ந்து மண்டபத்திற்கு போய் திருமணத்தை நடத்திவைத்தோம். பிறகு சாப்பிட்டுவிட்டு மண்டபத்தை விட்டு வெளியே சுமார் 7 மணியளவில் வந்து கொண்டிருந்தபோது பெண்கள் கூட்டமாக சென்றார்கள் அவர்களுக்கு பிறகு நாங்கள் சென்றோம். எங்களுக்கு பின்னால் வாய்மேடு ஊராட்சி மன்ற தலைவர் எ.எஸ்.சி பழனியப்பன் மற்றும் சுமார் 15, 20 பேர் வந்தார்கள். அப்போது 1வது எதிரி ஓ.எஸ்.மணியனை பார்த்து இவனை கொல்லுங்கடா விடாதீங்கடா என்று சொல்லி பழனியப்பன் ஓ.எஸ்.மணியனின் கழுத்தை நெறித்தார். கட்ட செந்தில் மற்றும் பாலமுருகன் ஓ.எஸ்.மணியனின் வேட்டியை பிடித்து இழுத்தார்கள். வீரபாண்டியன் டவுசரை பிடித்து இழுத்தார். தானிகோட்டகத்தை சேர்ந்த

மாக்கான் என்ற முருகானந்தம் கையில் கம்பி வைத்திருந்தார். மற்றும் தானிகோட்டம் தனபால் வாய்மேடு அருணகிரி, தகட்டூர் குமரவேல், வீரமணிகண்டன், பழனிவேல், நடுசேத்தியை சேர்ந்த ரஜினி, செந்தில், மருதுர் தெற்கு சேத்தியை சேர்ந்த கார்த்திகேயன், சுதாகார், அய்யப்பன், வைத்தியநாதன் எல்லோரும் நின்று கொண்டிருந்தார்கள் அவர்கள் கையில் கட்டையும் வைத்திருந்தார்கள். ஓ.எஸ்.மணியனை படிக்கடில் இருந்து இழுத்து ரோட்டில் கொண்டுபோய் வைத்து அடித்தார்கள். அதற்கு முதலில் பழனியப்பன் ஓ.எஸ். மணியனின் கழுத்தை பிடித்து நெறித்தபோதே அவரது வலது கையால் ஓ.எஸ்.மணியனின் இடது கண்ணில் குத்தி ரத்தம் வந்தது மூக்கிலும் ரத்தம் வந்தது. எதிரிகள் எல்லோரும் சேர்ந்து காலிலும் இடுப்பிலும் ஓ.எஸ்.மணியனை அடித்தார்கள். அதன்பிறகு கையில் கட்டையுடனும் கம்பியுடனும் தனபால், அருணகிரி, முருகானந்தம், பழனிவேல், வீரபாண்டியன் ஆகியோர் ஓ.எஸ்.மணியன் வந்த எஸ்.டி. ரவிசந்திரனுக்கு சொந்தமான டாடா சபாரி கார் டிஎன் 50 கெச் 0099 காரை கண்ணாடியையும் கதவுகளையும் அடித்து சேதப்படுத்திவிட்டு ஆட்டோ மற்றும் டாடா சுமோ காரில் ஓடிவிட்டார்கள். நாங்கள் அதாவது ஓ.எஸ்.மணியன், ரவிசந்திரன், மருதுர் வடக்கு மூர்த்தி நான் ஆகியோர் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். அங்கு உள்நோயாளியாக சேர்த்தார்கள். 1வது எதிரி அதிமுக ஒன்றிய செயலாளராக இருந்தவர் அவருடைய நடவடிக்கை சரியில்லாத காரணத்தினால் அவரை அதிமுக ஒன்றிய செயலாளர் பதிவியல் இருந்து கட்சி தலைமை நீக்கிவிட்டது. அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதற்கு ஓ.எஸ்.மணியன்தான் காரணம் என்று சொல்லி அடித்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்ரகள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது**.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.30/2019** P.W. 5

Deposition of witness for Prosecution:

Name : திரு. சரவணன் Father's Name .

Village :. வீரபுரம் Age .

Date : 12.02.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.02.2024.

( A2, A16 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed other accused are present )

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் வீரபுரம் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் எஸ்.டி. ரவிசந்திரன் என்பவரிடம் டிரைவராக வேலைப்பார்த்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும் எதிரிகளை தெரியும். கடந்த 28.01.2010 ம் தேதி மாலை சுமார் 7 மணியிருக்கும் ஓ.எஸ்.மணியன், எ.டி. ரவிசந்திரன், எம்.ஏ.ராதா, மூர்த்தி, சிவானந்தம் மற்றும் கட்சிகாரர்களுடன் மருதூர் கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்திற்கு திருமணத்திற்கு போய்விட்டு திரும்பி இறங்கி படியில் வந்துக்கொண்டிருந்தபோது கடைசி படிக்கு முதல் படியில் 1வது எதிரி மற்றும் அவரோடு சேர்ந்து சுமார் 20 பேர் வந்து ஓ.எஸ்.மணியனின் கழுத்தை 1வது எதிரி நெறித்து வலது கையால் இடது கண்ணில் குத்தி கண்ணிலும் மூக்கிலும் ரத்தம் வந்துவிட்டது. அவரை அடிக்கும் போது இவனை மானபங்க படுத்துங்க அசிங்கப்படுத்துங்கடா என்று சொன்னார். அவர் சொன்னவுடன் கட்ட செந்தில், பாலமுருகன் ஆகிய இருவரும் ஓ.எஸ்.மணியனின் வேட்டியை இழுத்தார்கள். ஓ.எஸ்.மணியனின் காலை பிடித்து ரோட்டுக்கு இழுத்துவந்து அவரை காலால் மிதித்து உதைத்தார்கள். ரஜினி, முருகானந்தம், பழனிவேல், வெற்றிவேல், வீரபாண்டியன், அருண் மற்ற எல்லோரும் சேர்ந்து மிதித்தார்கள். எஸ்.டி.ரவிசந்திரனின் கார் டாடா சபாரி டிஎன் 50 கெச் 0099 காரை அடித்து சேதப்படுத்தினார்கள். சேத மதிப்பு சுமார் ஒரு லட்சத்தில் இருந்து இரண்டு லட்சம் இருக்கும். மாக்கான் என்ற முருகானந்தம் அவரது கையில் கம்பியை வைத்து ஓ.எஸ்.மணியனின் கால் மற்றும் இடுப்பு பகுதியில் அடித்தார்கள்

மற்றவர்கள் கட்டையால் அவரை அடித்தார்கள். எதிரிகள் ஒரு சுமோவிலும் ஆட்டோவிலும் தப்பி போய்விட்டார்கள். காயம்பட்டவர்கள் நாகை அரசு மருத்தவமனையில் சிகிச்சைக்கு போனார்கள். அதிமுக ஒன்றிய செயலாளராக இருந்த 1வது எதிரி பதவியில் இருந்து கட்சி நீக்கிவிட்டதால் ஒன்றிய செயலாளராக போடுவதற்கு மாவட்ட செயலாளர் பரிந்துரை செய்யவில்லை என்றும் அதனால் நீக்கியதற்கு ஓ.எஸ்.மணியன் காரணம் என்று அவரை அடித்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது**.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.30/2019** P.W. 6

Deposition of witness for Prosecution:

Name : திரு. சிவானந்தம் Father's Name .

Village :. ஆதனூர் Age .

Date : 12.02.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.02.2024.

( A2, A16 absent. u/s.317 Cr.P.C petition is filed and allowed other accused are present )

**அரசு தரப்பு முதல் விசாரணை.**

நான் ஆதனூரில் வசித்துவருகிறேன். விவசாய வேலை பார்த்துவருகிறேன். அசா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 28.01.2010 ம் தேதி மாலை 7 மணியளவில் மருதூர் வெங்கடாசலதேவர் மகன் கல்யாணத்திற்காக கந்தபவுன்ராஜ் திருமணத்திற்கு ஓ.எஸ்.மணியன், ரவிசந்திரன், ராதாகிருஷ்ணன் நான் மூர்த்தி ஆகியோர்கள் போனோம். திருமணத்தை நடத்திவைத்துவிட்டு படியில் இறங்கி வந்துகொண்டிருந்தபோது பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அப்போது முன்னால் ஓ.எஸ்.மணியன் இறங்கினார். நாங்கள் கூட்டத்தில் மெதுவாக அவருக்கு பின்னால் இறங்கிவந்து கொண்டிருந்தோம். ஓ.எஸ்.மணியன் கடைசி படிக்கு இறங்கும்போது பழனியப்பன், கட்ட செந்தில், பிரபாகரன், வீரபாண்டியன், மற்றும் சுமார் 20 பேர் சேர்ந்து ஓ.எஸ்.மணியனை பழனியப்பன் பிடித்து இழுத்து குத்தியதில் மூக்கு உடைந்து ரத்தம் ஊத்தியது கண்ணிலும் ரத்தம் வந்தது. பழனியப்பன் என்னை ஏன் ஒன்றிய செயலாளராக போடவில்லை என்று சொல்லி குத்தி கீழே தள்ளி ரோட்டிற்கு உருட்டி கொண்டு வந்து அடித்து மித்தார்ரகள். இரும்பு கம்பி சவுக்கு கட்டை ஆகியவற்றை கொண்டு அடித்தார்கள். அந்த இடத்தில் எஸ்.டி. ரவிசந்திரன் கார் நம்பர் 99 ஐ அடித்து உடைத்தார்கள். எதிரிகள் அவர்கள் வந்த வண்டி மற்றும் ஆட்டோவில் ஏறிபோய்விட்டார்கள். எஸ்.டி. ரவிசந்திரனுக்கும் அடிவிழுந்தது. காயம்பட்ட ஓ.எஸ்.மணியன் மற்றும் எஸ்.டி ரவிசந்திரனை மருத்துவமனைக்கு

கூட்டிக்கொண்டுபோய் சிகிச்சையில் சேர்த்தோம். பழனியப்பனை ஒன்றிய செயலாளர் பதிவியல் இருந்து எடுத்துவிட்டு என்னை ஒன்றிய செயலாளராக நியமித்ததால் அவரை ஏன் ஒன்றிய செயலாளராக போடவில்லை என்று கேட்டு அடித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மனுவின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது**.